உ

திருச்சிற்றம்பலம்

அருள்மிகு சுந்தராம்பிகை
உடனுறை
அருள்மிகு கச்சபேஸ்வரர்
திருக்கோயில் திருத்தல வரலாறு



தொகுப்பு:

அருள்மிகு சுந்தராம்பிகை உடனுறை
அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக்கோயில்
திருக்குள தெப்போற்சவ டிரஸ்ட், காஞ்சிபுரம்.

திருமுருகனும் - நவவீரர்களும்!

- துரை.சௌந்தரராசன், காஞ்சிபுரம்.



எல்லாம் வல்ல பரம்பொருளாம் சிவபெருமான் அருளால், அண்டசராசரங்களும், மூவேழு உலகங்களும், நவகிரகங்களும், பிற கிரகங்களும், பஞ்ச பூதங்களும் உற்பவனம் ஆகி, அவரின் பேரருளால் இயங்கி வருகிறது.

பரம்பொருளாம் சிவபெருமானை முக்கோடி தேவர்களும், சப்தரிஷிகளும், முனிவர்களும், ஞானியர்களும், அவரை சதாசர்வ காலம், தியானித்து, தவம் செய்து வாழ்வார்கள். இன்னபிற வகையினரும், பரம்பொருளாம் சிவபெருமான் அருள்வேண்டி தவம் புரிதல் உண்டு. அவர்களின் தவத்தின் தூய்மை, பக்தி கண்டு சிவபெருமான் எழுந்தருளி, அவர்கட்குக் காட்சி தந்து, அருளாசி தந்து, அவர்கள் வேண்டும் வரங்களை வேண்டியவாறே அருளுவார்.

மேற்கண்டவாறு, தவம் செய்தவர்களின், அசுர குலத்தைச் சார்ந்த சூரபதுமன், சிங்கமுகாசூரன், தாரகசூரன். அவர்கட்கு ஒரே தங்கை அஜமுகி. மேற்படி சகோதரர்களின் கடுமையான தவத்தைக் கண்டு சிவபெருமான் மனமிரங்கி அவர்களுக்குத் தரிசனம் தந்து அருள்பாலிக்கிறார். தவம்செய்த சகோதரர்கள் மிருக, மனித, தேவர்களாலும் இன்னபிற வராலும், எவ்வகையிலும் தங்கட்கு மரணம் சம்பவிக்கக்கூடாது என்று வேண்டி வரம் பெற்றனர். சிவபெருமானிடம் வேண்டி, பாசுபதாஸ்வர ஆயுதத்தையும் பெறுகின்றனர்.

சர்வவல்லமையுடைய சர்வேஸ்வரனாம் சிவபெருமானின் அருளால், இறவா வரம் பெற்ற பயனால், தங்களை யாராலும் அழிக்க முடியாது என்ற அகந்தையால், ஆணவத்தால், மூவேழு உலக தேவர்களையும், இந்திரன் முதலானவர்களையும், ரிஷிகள், முனிவர்களையும் சிறைபிடித்து, இம்சிப்பதும், பதவிகளைப் பறித்து, தங்களாட்சியை நிலை நிறுத்தி அதர்மங்கள் வழி அக்கிரமங்களும் கொடுங்கோன்மைகளும் புரிந்து, அரக்கர்கள் பிறர் எல்லோர்க்கும் தீங்கு செய்கின்றனர்.

சூரபதுமன் மற்றும் அவனது சகோதரர்களின் ஆட்சியால் பாதிக்கப்பட்ட தேவர்களும், ரிஷிகளும், முனிவர்களும் சர்வேஸ்வரர் சிவபெருமான் திருமுன் சென்று, திருவருள் வேண்டி நிற்கின்றனர். சிவபெருமான் அவர்களின் கஷ்டங்களையும், அசுரர்களின் அக்கிரமங்களையும் உணர்ந்து அனைவரையும் பாதுகாப்பதாக, மறுவாழ்வு தருவதாக அருளாசி வழங்குகிறார்.

சிவபெருமான் தவத்தின் வழி, ஞானக்கண்களால் அனைத்தும் உணர்ந்து, தனது நெற்றிக் கண்ணிலிருந்து, ஆறு தீப்பொறிகளை வெளிப்படுத்துகிறார். தங்களை அழிக்கவே, சிவபெருமான் அவ்வாறு தீப்பொறிகளை வெளிப்படுத்துவதை உணர்ந்த, சூரபதுமன் மற்றும் சகோதரர்கள் சிவபெருமானால் வழங்கப்பட்ட பாசுபதாஸ்வரத்தை ஆறு தீப்பொறிகள் மீது ஏவி அழிக்க முற்படுகின்றனர். ஆனால் அத்தீப்பொறிகள் பாசுபதாஸ்வரத்திலிருந்து விலகி, கங்கையில் மூழ்கிட பாசுபதாஸ்வர சக்தி வீணாகிறது.

கங்கையில் மூழ்கிய ஆறு தீப்பொறிகளை, கங்கையானவள் காத்து ஆறு மழலைகளாகப் பெற்று

சரவணப் பொய்கையில் விட்டுச் செல்கிறாள். சரவணப் பொய்கையில் விடப்பட்ட ஆறு மழலைகள், சிவபெருமானால் அனுப்பி வைக்கப்பட்ட ஆறு கார்த்திகை கன்னிகையர்களால், பராமரிக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு, சர்வ கலைகளும் அவர்கட்குப் பயிற்சியளிக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றனர்.

இவைகளை உணர்ந்த சூரபதுமன் அக்குழந்தைகளை அழிக்க பலவகையில் முயன்று தோல்வி காண்கின்றான். அன்னை பார்வதி தேவியின் மானசீகமான அருள்சக்தியும், சிவபெருமானின் அருளால் பிறந்தமையால் அக்குழந்தைகளுக்கான சுயசக்தியாலும், தங்களைத் தாங்களே காத்து, வளர்கின்றனர். தக்கதொரு சமயம், அன்னை பார்வதி தேவி அவர்கள் ஆறு குழந்தைகளையும் ஒருசேர அணைக்க, அக்குழந்தைகள் ஆறுமுகங்கள் ஒருசேர அமைந்து, ஒரே குழந்தையாகி அக்குழந்தை ஆறுமுகப் பெருமானாகவும், பின்னர் ஏகமுகமாகி, திருமுருகனாகவும் விளங்குகிறார். சூரபதுமனை அழிக்கத் தோன்றிய திருமுருகனுக்கு, வெண்சமரில் துணைபுரிய பிற வீரர்களையும், உடன் உருவாக்க திருவுளம் கொண்டதனால், சிவபெருமான் நெற்றிக் கண்ணிலிருந்து கிளம்பிய தீப்பொறிகளைக் கண்டு பார்வதியார் பயந்து ஓடிய சமயம் அன்னையின் காற்சிலம்பிலிருந்து, நவமணிகள் என்னும் நவரத்தினங்கள் (மாணிக்கம், முத்து, புஷ்பராகம், கோமேதகம், வைடூரியம், வைரம், மரகதம், பவளம், இந்திரநீலம்) உதிர்ந்திட, அதில் அன்னை பார்வதி தேவியின் முகங்கள் பிரதிபலிக்க சிவபெருமானின் திருவுளப்பார்வை பதிய, அவைகள் மாணிக்கவல்லி, முத்துவல்லி, புஷ்பராகவல்லி, கோமேதகவல்லி, வைடூரியவல்லி, வைரவல்லி, மரகதவல்லி, பவளவல்லி, இந்திரநீலவல்லி முதலானோர் தோன்றி கர்ப்பம் தரித்தனர். அன்னை பார்வதி

சிவபெருமான் மீது அவநம்பிக்கைக் கொண்டு, நவக்கன்னியர்களின் கரு கர்ப்ப வளர்ச்சிக்கு தடை விதித்து சாபம் விடுகிறார். அதனால் நவரத்தின கன்னியர்களின் கர்ப்பம் வளர்ச்சியடையாத நிலை ஏற்பட, அவர்கள் பல்வேறு உபாதைகளுக்கு ஆளாகி, உடல்கள் வெப்பமுற்று, வியர்வைத் துளிகள் அளவு மீறி உருவாகி, அவைகள் உடலிலிருந்து சிந்த, இலட்சத்தவர்கள் உருவாகப் பெறுகின்றனர்.

சிவபெருமான், அன்னை பார்வதியிடம், நவரத்தின கன்னியர்கள் உன்னின் விரிவின் அம்சமே எனக்கூறி, என்மீது நம்பிக்கை கொள். அந்த கருக்களை, கர்ப்பத்தை வளரவிடு என்று கூறிட, அன்னை பார்வதி, நவரத்ன கன்னிகையர்களை மன்னித்து, கர்ப்பம் வளர நல்லாசிகள் வழங்குகிறார். நவரத்தின கன்னியர்களின் அன்னை பார்வதியின் கருணையையும், பேரருளையும் நினைந்தது, நாங்கள் உங்கட்கு என்றும் துணையாக உதவியாக இருப்போம். எமது சந்ததிகள் உங்கள் திருமகனார் திருமுருகனுக்கு பல்வகையாலும் தொண்டுபரிந்து வாழ்வார்கள்க என உறுதியளிக்கின்றனர்.

திருமுருகன் அவர்களின் இளமை கால வளர்ச்சி நேரம், நவரத்தின கன்னியர்கள் முறையே வீரவாகுதேவர், வீரகேசரி, வீரமகேந்திரர், வீரமாமகேச்சுரர், வீரமாபுரந்தார், வீராஷகர் வீரமார்த்தாண்டர், வீராந்தகர், வீரதீரர் என்பவர்களைப் பெற்றெடுக்கின்றனர். மேற்படி நவவீரர்களுக்கு, அன்னை பார்வதி தேவியார், குந்தம் என்னும் ஈட்டிப்படையை அருளினார். தேவர்கள், முனிவர்கள், ரிஷிகள் மற்றும் அண்டசராசரங்களிலும் தீங்கிழைத்து வாழும் சூரபதுமன், சிங்கமுகன், தாரகாசுரன், அஜமுகி மற்றும் அவர்கள் சந்ததி, வம்சங்களை அழிக்க,

சம்ஹாரம் செய்ய, சிவபெருமானின் பேரருளால் உருவாகி ஆறுகுழந்தைகள் அன்னை பார்வதியின் அணைப்பால், ஆறுமுகங்களுடன் கூடிய ஒரு உருவமாகி, ஆறுமுகப்பெருமான் எனப் பெயர் பெற்று, ஒரே முகமாக நிலைக்கும் திருமுருகனாகப் பரிணமளிக்கிறார். அசுரர்களை அழிக்க, திருமுருகனுக்கு உதவும் வகைக்கே, நவவீரர்கள் அவதரித்தனர். சிவபெருமான் - பார்வதி அருளாசி பெற்ற நவவீரர்கள் - திருமுருகனின் இளவல்கள் என போற்றப் பட்டனர். உபசுப்பிரமணிய கோத்திரத்தில் இணைக்கப்பட்டனர்.

சூரபதுமன் மற்றும் அவனது சகோதரர்களின் ஆணவமும், அகந்தையும், தொல்லைகளும், கொடுங்கோல் தன்மை அளவு மீறிட, அவர்களை அழிக்க காலம் கனிகிறது.

சிவபெருமானின் தவப்புதல்வராகிய திருமுருகனுக்கு, தொண்டாற்றவும், சூரபதுமனை அழிக்க முனையும் போரில் துணைபுரியவும் உருவான நவவீரர்களில் முதல்வரான வீரவாகுதேவர், திருமுருகனின் ஆணைப்படி சூரபதுமனிடம் தூது போகிறார். சூரபதுமனுக்குப் பல்வகை உபதேசங்கள் செய்து, திருமுருகனிடம் சரணடைய கூறுகிறார். ஆணவத்தின் அதி உச்சத்திலிருந்த சூரபதுமன் திருமுருகனிடம் சரணடையாது, போருக்கு அழைக்கிறான்.

வீரவாகுதேவர் மற்றும் அவரது சகோதரர்களுடன் இலட்சத்தவர்களும் இணைந்து வெண்சமர்புரிந்து, பன்முக ஆற்றல் படைத்த சிங்கமுகனையும், உக்கிராடதனத்தின் அதி உச்சமான தாரகாசூரனையும், அஜமுகியையும் சூரபதுமனின் வம்ச சந்ததிகள் பானுகோபன், வச்சிரவாகு, இரணியன், அக்னி மாசூரன், மந்திரி தருமகோபன் மற்றும் அசுரர்கள் அனைவரையும் அழிக்கின்றனர். எஞ்சி நின்றவன் சூரபதுமன் மட்டுமே.

சூரபதுமனை போரிட்டு அழிக்க, திருமுருகனே எழுந்தருளி போரிடுகிறார். மாயாசக்தி படைத்த சூரபத்மன் பல்வகையிலும் தன்னைக் காத்துக்கொள்கிறான். ஆறுநாட்கள் உக்கிரமான போர் நடந்தது. சூரபத்மன் தன்னைக் காத்துக்கொள்ள பெரிய மாமரமாகி கடலில் ஒளிந்து கொள்கிறான். திருமுருகப் பெருமானின் திருக்கை வேலாகிய, வீரவேலை அனுப்பி, சூரபதுமனை சம்ஹாரம் செய்யும் விதமாக இரண்டாகப் பிளக்க, அவைகள் சேவலாகவும், மயிலாகவும் மாறுகின்றன.

ஆணவத்தின் அதி உச்சமாக இருந்த சூரபதுமன் திருமுருகப் பெருமானின் திருவடிகளின் பெருமை சிந்தித்து, திருமுருகனின் அருள்வேண்டி, நெக்குருகி பிரார்த்தித்து சரணடைகிறான். பகைவனுக்கும் அருளும் நல்மனம் கொண்ட எம்பெருமான் சேவலாகவும், மயிலாகவும் மாறியவைகளில் மயிலைத் தன் வாகனமாகவும், சேவலைத் தனது கொடியில் பதித்தும் அவனுக்கு அருள்பாலிக்கிறார்.

தேவர்களும், முனிவர்களும், ரிஷிகளும் சூரபதுமன் மற்றும் வம்ச அழிவுகளுக்குப் பின்னர், பழைய நிலைகளைப் பெறுகின்றனர். இந்திரன் முதலான தேவர்கள் திருமுருகப் பெருமானின் பேரருளை சிந்தித்து, மகிழ்ந்து எம்பெருமானுக்கு சிவபெருமான் பார்வதி அருளாசியுடன் இந்திரனின் மகளான தெய்வயானையை மணமுடிக்கின்றனர்.

பிறிதொரு காலத்தில் வள்ளியை, ஸ்ரீவிநாயகர் அருளாசியுடன் தாமே மணந்து, உலகிற்கு ஸ்ரீவள்ளி, ஸ்ரீதேவசேனா சமேத ஸ்ரீசுப்பிரமணிய சுவாமியாக, பெருமானாக நிலைத்த காட்சி தந்து, உலகினருக்கு அருள்பாலித்து வருகிறார்!

அருள்மிகு சுந்தராம்பிகை உடனுறை அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக்கோயில் திருக்குள தெப்போற்சவம் டிரஸ்ட்



திருக்கோயில் திருக்குள தெப்போற்சவ டிரஸ்ட் நிர்வாகிகள்:

சிறப்பு தலைவர்	: திரு. வ.காளத்தி முதலியார் அவர்கள்
தலைவர்	: திரு. சோ.லோகநாதன் அவர்கள்
செயலாளர்	: திரு. க.சிவகுமரன் அவர்கள்
பொருளாளர்	: திரு. E.தணிகைவேல் அவர்கள்
துணைத் தலைவர்	: திரு. P.விஜயராகவன் அவர்கள்
இணைச் செயலாளர்	: திரு. S.பெருமாள் (பெருமாள் சில்க்) அவர்கள்
துணைச் செயலாளர்	: திரு. S.வெங்கடேசன் அவர்கள்
செயற்குழு உறுப்பினர்கள்	: திரு. K.குட்டி (எ) சுப்பிரமணி அவர்கள்
	திரு. V.லோகநாதன் அவர்கள்
	திரு. K.சுதா (எ) சுப்பராயன் அவர்கள்
	திரு. S.ரவிக்குமார் அவர்கள்
	திரு. V.கார்த்திகேயன் அவர்கள்
	திரு. G.கண்ணன் அவர்கள்

ஸ்ரீ துர்கா ஆப்செட் பிரிண்டர்ஸ், பெரிய காஞ்சிபுரம். செல்: 9364324608